JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **18/2020** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 5** | Prosecution /Defence / Court | |
| Name | **ராமன்** | Village | கவுந்தப்பாடி, மேட்டுப்பாளையம் காலனி, கோபி |
| Father's Name | **சென்னி** | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 04.02.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு தோட்டத்து வேலை செய்து வருகிறேன். 20.12.2019 ம் தேதி காலை 9.00 மணிக்கு பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் ஆஜர் எதிரி லோகநாதனை பிடித்து விசாரித்துக் கொண்டிருந்த போது என்னுடன் பெருமாளும் இருந்தார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். ஒப்புதல் வாக்குமூலத்தில் பெருமாள் முதலாவதாக கையொப்பம் செய்தார். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பின்னர் ஆஜரில் உள்ள எதிரி லோகநாதன் பேன்ட் பாக்கெட்டிலிருந்து தங்க செயினை எடுத்து ஆஜர் செய்ததை 9.45 –10.00 மணி இருக்கும். கைப்பற்றுதல் மகஜரில் 3 பவுன் தங்க செயினை கைப்பற்றினார்கள். கைப்பற்றுதல் மகஜரில் முதலாவதாக பெருமாளும், இரண்டாவதாக நானும் சாட்சி கையொப்பங்களை செய்துள்ளோம். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது.** என்னை பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** அ.சா.1 எனக்கு உறவினர் என்றால் சரிதான். பெருமாள் எனக்கு உறவினர் அல்ல. பெருமாளை எனக்கு ஏற்கனவே தெரியும் என்றால் சரிதான். சாட்சி போட வேண்டும் என்று போலீசார் கேட்டுக் கொண்டார்கள் என்றால் சரிதான். எப்போது கேட்டார்கள் என்றால் காலை 9:45 மணி இருக்கும். நான் சாட்சி போட்ட விவரம் அ.சா.1 சங்கீதாவுக்கு தெரியும். நான் சாட்சி போட்ட விவரம் அ.சா.1 சங்கீதாவுக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் கவுந்தப்பாடி மேட்டுப்பாளையத்தில் தோட்டத்து வேலை செய்து வருகிறேன். நான் எத்தனை மணிக்கு வேலைக்கு சென்று திரும்பி வருவேன் என்றால் காலை 7 மணிக்கு சென்று மதியம் 2 மணிக்கு திரும்பி வருவோம். கையெழுத்து செய்த அன்று நான் எங்கிருந்து வந்தேன் என்பதை போலீசார் கேட்டு தெரிந்து கொண்டார்கள் என்றால் ஆமாம். அந்த விபரத்தை போலீசார் பதிவு செய்து கொண்டார்களா என்றால் எனக்கு தெரியாது.

2. அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3 ல் என்ன விவரம் எழுதியிருந்தது என்று விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 சங்கீதாவுக்கும் எதிரி லோகநாதனுக்கும் ஏற்கனவே பிரச்சனை இருந்த விவரம் தெரியுமா என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது. என்னை விசாரித்த இடத்தில் எத்தனை பேர் போலீசார் விசாரித்துக் கொண்டு இருந்தார்கள் என்றால் நான்கு பேர் இருந்தார்கள். யார் யாரை விசாரித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. அங்கு இருந்தவர்களிடம் என்ன என்ன விவரம் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. எத்தனை கையெழுத்து என்னிடம் வாங்கினார்கள் என்றால் 2 கையெழுத்து வாங்கினார்கள். வெறும் பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. கையால் எழுதிய பேப்பரில் தான் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். என்னை காவல் நிலையம் வரச் சொல்லவில்லை.

3. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை அ.சா.1 ன் உறவினர் என்பதால் காவல் நிலையத்தில் வெற்றுப் பேப்பரில் கையெழுத்து செய்து விட்டு கையால்

**எழுதப்பட்ட பேப்பரில் கையெழுத்து செய்ததாக சொல்கிறேன் என்றால் சரியலல. என் முன்னிலையில் எந்த பொருளும் கைப்பற்றவில்லை, எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றாலும், எதிரி என் முன்னிலையில் செயினை கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை